**செய்தி வெளியீடு எண்:47** **நாள்:22.01.2021**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று (22.1.2021) தலைமைச் செயலகத்தில், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை சார்பில் ஈரோடு மாவட்டம், ஈரோடு ஆயுதப்படை வளாகத்தில் 22 கோடியே 60 லட்சத்து 77 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 150 காவலர் குடியிருப்புகளை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், 41 கோடியே 23 லட்சத்து 38 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை கட்டடங்களை திறந்து வைத்து, 48 கோடியே 3 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள 4 மாவட்ட காவல் அலுவலகக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாப்பது, சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது, குற்றங்கள் நிகழாமல் தடுப்பது, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தக்க தண்டனை பெற்றுக் கொடுப்பது போன்ற பல்வேறு முக்கிய பணிகளை காவல்துறை ஆற்றி வருகின்றது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த காவல்துறையின் பணிகள் மேலும் சிறக்க, புதிய காவல் நிலையங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகளைக் கட்டுதல், காவல்துறை அலுவலகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், ரோந்து பணிகளை மேற்கொள்ள புதிய வாகனங்களை வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், ஈரோடு மாவட்டம், ஈரோடு ஆயுதப்படை வளாகத்தில் 22 கோடியே 60 லட்சத்து 77 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 150 காவலர் குடியிருப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். இக்குடியிருப்பானது தரை மற்றும் மூன்று தளங்களுடன், ஒவ்வொரு குடியிருப்பும் 650 சதுர அடி பரப்பளவில், இரண்டு படுக்கை

அறைகள், சமையலறை, குளியலறை மற்றும் கழிப்பறை, ஆழ்துளை கிணறு, மழைநீர் சேகரிப்பு வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

மேலும், திண்டுக்கல் மாவட்டம் – ஒட்டன்சத்திரம், கள்ளக்குறிச்சி மாவட்டம் – கள்ளக்குறிச்சி, விருதுநகர் மாவட்டம் – வத்திராயிருப்பு ஆகிய இடங்களில் 13 கோடியே 76 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 102 காவலர் குடியிருப்புகள்;

செங்கல்பட்டு மாவட்டம் – குரோம்பேட்டை, மதுரை மாவட்டம் – கீரைத்துரை மற்றும் எஸ். எஸ். காலனி, இராமநாதபுரம் மாவட்டம் – கீழக்கரை, நயினார்கோவில் மற்றும் பேரையூர், திருப்பத்தூர் மாவட்டம் – குரிசிலாபட்டு, தென்காசி மாவட்டம் – சங்கரன்கோவில் நகர மற்றும் போக்குவரத்து காவல் நிலையங்கள் ஆகிய இடங்களில் 8 கோடியே 87 லட்சத்து 88 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 9 காவல் நிலையக் கட்டடங்கள்;

சென்னை மாவட்டம் – மயிலாப்பூரில் 1 கோடியே 13 லட்சத்து 17 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள துயில் கூடம் மற்றும் விருதுநகர் மாவட்டம் – சிவகாசியில் 71 லட்சத்து 32 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள காவலர் மருத்துவமனைக் கட்டடம்;

சென்னை மாவட்டம் – அசோக் நகர், திருவொற்றியூர் மற்றும் கீழ்ப்பாக்கம், கன்னியாகுமரி மாவட்டம் – குளச்சல், இராமநாதபுரம் மாவட்டம் – ஆர்.எஸ்.மங்கலம் மற்றும் தென்காசி மாவட்டம் – வாசுதேவநல்லூர், விழுப்புரம் மாவட்டம் – வானூர் ஆகிய இடங்களில் 11 கோடியே 96 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 7 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையக் கட்டடங்கள்;

நீலகிரி மாவட்டம் – கூடலூரில் 3 கோடியே 24 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை பணியாளர்களுக்கான 15 குடியிருப்பு கட்டடங்கள்;

திருநெல்வேலி மாவட்டம் – பாளையங்கோட்டையில் 1 கோடியே 54 லட்சத்து 76 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை பணியாளர்களுக்கான 8 குடியிருப்பு கட்டங்கள்;

என மொத்தம், 63 கோடியே 84 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை மற்றும் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், புதிதாக தோற்றுவிக்கப்பட்ட செங்கல்பட்டு, திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் 48 கோடியே 3 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள மாவட்ட காவல் அலுவலகக் கட்டடங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள்.

தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் 2019–20ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் பங்கிற்கான பகுதி ஈவுத் தொகையான 1 கோடியே 92 லட்சத்து 63 ஆயிரத்து 200 ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் இன்று தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு.ம.நா.மஞ்சுநாதா, இ.கா.ப., அவர்கள் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. கே.ஏ.செங்கோட்டையன், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. சி.வி.சண்முகம், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. கே.சி.கருப்பணன், தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு.J.K. திரிபாதி, இ.கா.ப., தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை இயக்குநர் முனைவர் சி. சைலேந்திர பாபு, இ.கா.ப., சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை

இயக்குநர் திரு.சுனில் குமார் சிங், இ.கா.ப, தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு.ம.நா.மஞ்சுநாதா, இ.கா.ப., சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் திரு. மகேஷ் குமார் அகர்வால், இ.கா.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**